

TNPSC குரூப் 2A Mains 2026

தாள் II வினாத்தாள் – விடை, விளக்கத்துடன்

Group 2A Mains 2026 Question Paper with Answers (Tamil + English)

RE/GS2AM/2026

200 வினாக்கள், 300 மதிப்பெண், 3 மணி நேரம் – இப்போதைய தேர்வு முறை (பொது அறிவு 150 + காரணவியல் 50).

Shanmugam IAS Academy · Coimbatore · Madurai · Online · 99941 46662

shanmugamiasacademy.in/tnpsc-group-2a-mains

வினா 1 · அலகு I

கீழ்க்காண்பவற்றுள் தமிழ்நாட்டில் பாப்பா உமாநாத் பற்றிய உண்மையான கூற்றுகள் யாவை?

(1) உப்புச் சத்தியாகிரகத்திற்காக ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட முதல் தென்னிந்தியப் பெண்மணி

(2) துவரிமான் கிராமத்தில் ஓர் குடியானவர் இயக்கத்தினை நிறுவினர்.

(3) பொன்மலை பெண்கள் கூட்டமைப்பில் ஒரு அங்கமானர்.

(4) 1945-ல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

(A) (1) மற்றும் (2) சரியானவை

(B) (2) மற்றும் (4) சரியானவை

(C) (1) மற்றும் (4) சரியானவை

(D) (2) மற்றும் (3) சரியானவை

Which of the following statement/s is/are true about Papa Umanath of Tamil Nadu?

(1) She was the first woman in South India to have been arrested by the British for Salt Sathyagraha.

(2) She organised a Peasant movement in Thuvariman Village.

(3) She became part of the Ponmalai Women's Association.

(4) She joined the Congress Party in 1945.

(A) (1) and (2) are true

(B) (2) and (4) are true

(C) (1) and (4) are true

(D) (2) and (3) are true

விடை: (D) (2) மற்றும் (3) சரியானவை – பாப்பா உமாநாத் 1931-ல் பிறந்தவர் – 1930 உப்புச் சத்தியாகிரகத்தில் கைது சாத்தியமில்லை; 1945-ல் இணைந்தது கம்யூனிஸ்ட் கட்சி (காங்கிரஸ் அல்ல). எனவே (2), (3) சரி.

Pappa Umanath (b. 1931) could not be in the 1930 Salt Satyagraha, and in 1945 she joined the Communist Party (CPI), not Congress; (2) and (3) are true.

வினா 2 · அலகு I

பின்வரும் கூற்றுகளில் தாமஸ் மன்ரோ குறித்து எது/எவை சரியானவை?

(i) இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தினர்.

(ii) திருமலை திருப்பதி கோயிலுக்குப் பெரிய கொப்பரை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினர்.

(iii) பகோடா நாணயங்களுக்குப் பதிலாக ரூபாய் நாணயங்களை இடம்பெறச் செய்தார்.

(A) (i) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

Which is/are the following facts about Thomas Munroe correct?

(i) He introduced Ryotwari system.

(ii) He donated a big vessel to Tirupathi Tirumala temple.

(iii) He replaced pagoda with rupee.

(A) (i) only

(B) (ii) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (i) and (iii) only

விடை: (C) (i) மற்றும் (ii) மட்டும் – மன்ரோ இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தினர்; திருமலைக்குப் பெரிய கொப்பரை வழங்கினர். பகோடாவுக்குப் பதில் ரூபாய் 1818-ல் (அவர் ஆளுநராகும் முன்) வந்தது.

Munro introduced the Ryotwari system and gifted a large vessel ('Munro gangalam') to Tirumala; the rupee replaced the pagoda in Madras in 1818, before he became Governor (1820).

வினா 3 · அலகு I

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"
என்ற குறட்பாவில் மனித உறவுகள் இனிமையாகத் திகழ வலியுறுத்தப்படும் பண்பு எது?

(A) கடுமையான சொற்களைப் பயன்படுத்தாமை

(B) பயனற்ற சொற்களைக் கூருமை

(C) உண்மையற்ற சொற்களைப் பேசாமை

(D) அறிவின் வழி வாராச் சொற்களைச் சொல்லாமை

Speaking bitterly when sweet words prevail, is eating the sour for ripe fruits in the couplet, which of the following human values is stressed for human good relations?

(A) Not to use harsh words

(B) Not to speak meaningless words

(C) Not to speak untruthful words

(D) Not to use unknowledgeable words

விடை: (A) கடுமையான சொற்களைப் பயன்படுத்தாமை – குறள் 100 (இனியவை கூறல்): இனிய சொல் இருக்கக் கடுஞ்சொல் கூறுதல் கனி இருக்கக் காய் உண்பது போன்றது – கடுஞ்சொல் தவிர்.

Kural 100 (Iniyavai Kooral): using harsh words when sweet ones exist is like choosing unripe fruit over ripe – avoid harsh words.

வினா 4 · அலகு I

யாருடைய வறுமை நினைக்கப்படும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

(A) நேர்மையானவர்
(B) திருடர்
(C) கயவர்
(D) தீ நட்பு

According to Valluvar to whom poverty will be pondered?

(A) Righteous
(B) Thieves
(C) Baseness
(D) Evil friends

விடை: (A) நேர்மையானவர் – குறள் 169: 'அவ்வித் தழுக்கா றுடையான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப் படும்' – நேர்மையானவனின் (செவ்வியான்) கேடு நினைக்கப்படும்.

Kural 169: 'அவ்வித் தழுக்கா றுடையான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப் படும்'. The ruin (poverty) of the upright (செவ்வியான்) is pondered upon.

TNPSC இந்த வினாவை நிபுணர் குழுவின் இறுதி முடிவுக்கு அனுப்பியுள்ளது.

வினா 5 · அலகு I

சரியாகப் பொருந்தியுள்ளவற்றைத் தேர்வு செய்க.

(1) சேர அரசர் – வஞ்சி–தொண்டி
(2) சோழ அரசர் – மதுரை–கொற்கை
(3) பாண்டிய அரசர் – உறையூர்–பூம்புகார்
(4) அசோக மன்னன் – சம்பா கல்வெட்டு

(A) (3) மற்றும் (4) மட்டும்
(B) (1) மற்றும் (4) மட்டும்
(C) (2) மற்றும் (3) மட்டும்
(D) (4) மற்றும் (2) மட்டும்

Choose the correct matches from the given matches:

(1) Chera King – Vanji–Thondi
(2) Chola King – Madurai–Korkai
(3) Pandiya king – Uraiyur–Poombugar
(4) King Ashoka – Samba Inscription

(A) (3) and (4) only
(B) (1) and (4) only
(C) (2) and (3) only
(D) (4) and (2) only

விடை: (B) (1) மற்றும் (4) மட்டும் – சேரர் – வஞ்சி, தொண்டி சரி; மதுரை–கொற்கை பாண்டியருடையது, உறையூர்–பூம்புகார் சோழருடையது. எனவே (1),(4) – விடை B.

Chera capital Vanji, port Thondi – correct; Madurai–Korkai belong to Pandyas and Uraiyur–Puhar to Cholas, so (2),(3) are wrong; only option B is possible.

வினா 6 · அலகு I

உ.வே.சா. பதிப்பித்த சங்க நூல்களை அதன் ஆண்டுகளோடு பொருத்துக.

(a) பத்துப்பாட்டு – 1. 1903
(b) புறநானூறு – 2. 1889
(c) ஐங்குறுநூறு – 3. 1904
(d) பதிற்றுப்பத்து – 4. 1894

(A) (a)-4 (b)-1 (c)-2 (d)-3
(B) (a)-2 (b)-4 (c)-1 (d)-3
(C) (a)-3 (b)-2 (c)-4 (d)-1
(D) (a)-1 (b)-4 (c)-3 (d)-2

Match the Sangam books published by U.V.SA. with the years they were published:

(a) Pathupattu – 1. 1903
(b) Puranануru – 2. 1889
(c) Ingururuнuru – 3. 1904
(d) Pathitrupathu – 4. 1894

(A) (a)-4 (b)-1 (c)-2 (d)-3
(B) (a)-2 (b)-4 (c)-1 (d)-3
(C) (a)-3 (b)-2 (c)-4 (d)-1
(D) (a)-1 (b)-4 (c)-3 (d)-2

விடை: (B) (a)-2 (b)-4 (c)-1 (d)-3 – உ.வே.சா. பதிப்பு: பத்துப்பாட்டு 1889, புறநானூறு 1894, ஐங்குறுநூறு 1903, பதிற்றுப்பத்து 1904.

U.Ve.Sa published Pathuppattu 1889, Puranануru 1894, Ainkururuнuru 1903, Pathitrupathu 1904.

வினா 7 · அலகு I

கி.மு 6-ஆம் நூற்றாண்டில் மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக விளங்கினர். காரணம்,

(1) கீழடியில் கிடைத்த பானையில் 'தமிழி எழுத்துகள்' பொறிக்கப்பட்டுள்ளன.

(2) கீழடியில் கிடைத்த பெரும்பாலான பானைகளில் பானை உலர்ந்த பின்னர் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

(3) கீழடியில் கிடைத்த கருப்பு, சிவப்பு நிறப் பானைகளில் கடவுள் உருவம் பொறிக்கப்பட்டிருந்தன.

(4) பானையில் எழுதப்பட்ட எழுத்துகள் ஒரே எழுத்தமைதியில் இருந்தன.

(A) (1) மட்டும் சரி
(B) (2) மட்டும் சரி
(C) (3) மற்றும் (4) சரி
(D) (1) மற்றும் (2) சரி

People living in BC 6th century were literate. Because,
(1) The pot found at the Keezhadi has Tamizhi scripts engraved on it.
(2) Most of the pots found at the Keezhadi were inscribed with letters after the pot had dried
(3) The black and red coloured pots found in Keezhadi have the image of God engraved on them.
(4) The letter written on the pot were in the same script.
(A) (1) only correct
(B) (2) only correct
(C) (3) and (4) are correct
(D) (1) and (2) are correct

விடை: (D) (1) மற்றும் (2) சரி – கீழடிப் பானை ஓடுகளில் தமிழி எழுத்துகள் உள்ளன; பெரும்பாலும் பானை உலர்ந்த/சுட்ட பின் கீறப்பட்டவை – பொதுமக்கள் எழுத்தறிவு பெற்றதைக் காட்டுகின்றன; கடவுள் உருவம் இல்லை.
Keezhadi sherds bear Tamil-Brahmi (Tamizhi) letters, mostly scratched after the pots were made/dried, showing common people could write; no god images were found and scripts varied in hand.

வினா 8 · அலகு I

கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான கூற்றுகளை தேர்ந்தெடுக்க.

பேரறிஞர் அண்ணா ஆட்சியில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. தமிழை பல்வேறு துறைகளில் இணைக்க அவர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

(i) 'சத்யமேவ ஜெயதே' என்ற சொற்கள் அரசு இலச்சினையில் இருந்து நீக்கப்பட்டு, 'வாய்மையே வெல்லும்' என்னும் தமிழ் சொற்கள் சேர்க்கப்பட்டன.

(ii) செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முதன் முறையாக 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்ற பெயர்ப் பலகை திறக்கப்பட்டது.

(iii) தமிழக அரசுப் பேருந்துகளில் திருக்குறள் வசனங்கள் எழுதி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (i), (ii) மற்றும் (iii)

Consider the following statements and find the correct statements.
During Peraringnar Anna's rule, preferences were given to Tamil language. Many steps were taken by him to incorporate Tamil in different fields.
(i) Removed 'Satyameva Jayate' from the Government Motto and incorporated the Tamil words 'Vaimaye Vellum' in it.
(ii) The name board 'Tamilaga Arasu Thalaimai Cheiyalakam' was opened in St. George Fort for the first time.
(iii) Measures were taken to write Thirukkural verses on Tamil Nadu Government buses.
(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (i), (ii) and (iii)

விடை: (D) (i), (ii) மற்றும் (iii) – அண்ணா ஆட்சியில் அரசு இலச்சினையில் 'வாய்மையே வெல்லும்', கோட்டையில் 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' பலகை, அரசுப் பேருந்துகளில் திருக்குறள் – மூன்றும் சரி.
Under Anna (1967–69) 'Vaimaiye Vellum' replaced 'Satyameva Jayate' in the state emblem, the Secretariat board was put up in Tamil and Thirukkural couplets appeared in govt buses.

வினா 9 · அலகு I

பின்வரும் அறிக்கைகளை கவனியுங்கள் :

கூற்று [A] : லோக்மானிய திலகர் 'சுயராஜ்' இயக்கத்தைத் தன்னுட்சி இயக்கம் என மறு உருவம் கொடுத்து மாற்றி அமைத்தார்.

காரணம் [R] : சுயராஜ் என்ற சொல் ஆங்கிலேய அரசிற்கு முற்றிலும் விரும்பத்தகாத சொல்லாக இருந்தது. மேலும், இது ஒரு துரோகச் சொல்லாகக் கருதினர்.

(A) [A] சரியானது, ஆனால் [R] தவறான காரணம்
(B) [A] தவறானது, ஆனால் [R] சரியான காரணம்
(C) [A] மற்றும் [R] இரண்டும் சரியானவை. ஆனால் [R] என்பது [A]க்குச் சரியான விளக்கமல்ல
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரியானவை, மற்றும் [R] என்பது [A]க்குச் சரியான விளக்கமாகும்.

Consider the following statements :
Assertion [A] : Lokmanya Tilak preferred to replace Swaraj and redesigned it as Home Rule
Reason [R] : The British Government was quite allergic to the term Swaraj and considered it seditious.
(A) [A] is true but [R] is false
(B) [A] is false but [R] is true
(C) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]
(D) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

விடை: (D) [A] மற்றும் [R] இரண்டும் சரியானவை, மற்றும் [R] என்பது [A]க்குச் சரியான விளக்கமாகும். – 'சுயராஜ்' என்பதை ஆங்கிலேயர் தேசத்துரோகச் சொல்லாகக் கருதியதால் திலகர் அதே இலக்கை 'தன்னுட்சி (Home Rule)' என மாற்றினார் – R, A-வை விளக்குகிறது.
Since the British treated 'Swaraj' as seditious, Tilak used the legally safer term 'Home Rule' (1916) for the same goal – R explains A.

வினா 10 · அலகு I

பின்வருவனவற்றிலிருந்து சரியாகப் பொருந்திய இணைகளைத் தேர்ந்தெடுக்க

(1) தர்மாலயம் – வி.வி சுப்பிரமணியம்

(2) பாரதமாதா சங்கம் – நீலகண்ட பிரம்மச்சாரி

(3) பாரதி ஆசிரமம் – வ.உ. சிதம்பரம்

(4) சுதேசி கப்பல் கம்பெனி – சுப்பிரமணிய சிவா

(A) (1) மற்றும் (3) சரியானது
(B) (1) மற்றும் (2) சரியானது
(C) (2) மற்றும் (3) சரியானது
(D) (3) மற்றும் (4) சரியானது

Choose the correctly matched pairs from the following.
(1) Dharmalayam – V.V. Subramaniam
(2) Bharata Mata Sangam – Neelakanta Bramachari
(3) Bharathi Ashramam – V.O. Chidambaram
(4) Swadeshi Steam Navigation Company – Subramania Siva
(A) (1) and (3) are correct
(B) (1) and (2) are correct
(C) (2) and (3) are correct
(D) (3) and (4) are correct

விடை: (B) (1) மற்றும் (2) சரியானது – பாரதமாதா சங்கம் – நீலகண்ட பிரம்மச்சாரி; சுதேசி கப்பல் கம்பெனி வ.உ.சி.யுடையது, பாரத ஆசிரமம் சிவாவுடையது – எனவே (1), (2) சரி.
Bharata Matha Sangam was founded by Neelakanta Brahmachari; the Swadeshi Steam Navigation Co. was V.O. Chidambaram's (not Siva's) and Bharata Ashram was Siva's (not VOC's) – so (1) and (2).

வினா 11 · அலகு I

கீழ்க்காண் சென்னை மாகாண ஆளுநர்களை கால அடிப்படையில் வரிசைப்படுத்துக.

(1) லூஷிங்டன்

(2) தாமஸ் மன்ரோ

(3) ஹியூஜ் எலியட்

(4) ஜார்ஜ் பார்லோ

(A) (4), (3), (1), (2)
(B) (3), (2), (1), (4)
(C) (4), (3), (2), (1)
(D) (1), (2), (3), (4)

Arrange the following Governors of Madras Presidency in chronological order.
(1) Lushington
(2) Thomas Munroe
(3) Huge Elliot
(4) George Barlow
(A) (4), (3), (1), (2)
(B) (3), (2), (1), (4)
(C) (4), (3), (2), (1)
(D) (1), (2), (3), (4)

விடை: (C) (4), (3), (2), (1) – ஜார்ஜ் பார்லோ 1807–13, ஹியூ எலியட் 1814–20, தாமஸ் மன்ரோ 1820–27, லூஷிங்டன் 1827–32.
George Barlow 1807–13, Hugh Elliot 1814–20, Thomas Munro 1820–27, Stephen Lushington 1827–32.

வினா 12 · அலகு I

ராமகிருஷ்ணா மிஷன் வேதாந்தக் கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்கிறது

(i) இந்தியாவின் பண்டைய கலாச்சாரத்தை பாதுகாக்கிறது.

(ii) மனிதனில் உள்ளார்ந்த மிக உயர்ந்த ஆன்மீகத்தை வளர்க்கிறது.

(iii) இந்து மதத்தின் உண்மையை மட்டுமே நம்ப வேண்டும் என கூறுகிறது.

(A) (i) மற்றும் (ii)
(B) (i) மட்டுமே
(C) (ii) மற்றும் (iii)
(D) (i) மற்றும் (iii)

The Ramakrishna Mission upholds Vedanta Doctrine
(i) To protect ancient culture of India.
(ii) To develop highest spirituality inherent in man.
(iii) To believe in the truth of Hindu religion only.
(A) (i) and (ii) only
(B) (i) only
(C) (ii) and (iii) only
(D) (i) and (iii) only

விடை: (A) (i) மற்றும் (ii) – ராமகிருஷ்ண மிஷன் எல்லா மதங்களும் உண்மை என்ற சமய நல்லிணக்கத்தைப் போதிக்கிறது; (iii) தவறு, (i), (ii) சரி.
The Mission preaches the harmony and truth of all religions, not of Hinduism alone; (i) and (ii) are its aims.

வினா 13 · அலகு I

தென்னிந்தியப் புரட்சியின் போது நடந்த நிகழ்வுகளை காலமுறைப்படி வரிசைப்படுத்துக.

(1) திருநெல்வேலி கூட்டமைப்பு

(2) திண்டுக்கல் கூட்டமைப்பு

(3) தென்னிந்திய கூட்டமைப்பு

(4) பிராந்திய கூட்டமைப்பு

(A) (3), (1), (2), (4)
(B) (2), (4), (1), (3)
(C) (4), (1), (2), (3)
(D) (4), (3), (2), (1)

Arrange the following events with regard to South Indian Rebellion in chronological order.

(1) Tirunelveli confederacy

(2) Dindugal confederacy

(3) Peninsular confederacy

(4) Regional leagues

(A) (3), (1), (2), (4)
(B) (2), (4), (1), (3)
(C) (4), (1), (2), (3)
(D) (4), (3), (2), (1)

விடை: (C) (4), (1), (2), (3) – முதலில் பகுதிவாரிக் கூட்டமைப்புகள், பின் திருநெல்வேலி, திண்டுக்கல் கூட்டமைப்புகள், இறுதியில் மருது சகோதரர்கள் தலைமையிலான தென்னிந்தியக் கூட்டமைப்பு (1800–01).

The rebels first formed regional leagues, then the Tirunelveli and Dindigul confederacies, which finally merged into the Peninsular (South Indian) confederacy of 1800–01 under the Marudu brothers.

TNPSC இந்த வினாவை நிபுணர் குழுவின் இறுதி முடிவுக்கு அனுப்பியுள்ளது.

வினா 14 · அலகு I

கீழ்க்காண் குடியேற்றங்கள்/தலைமையிடங்களில் சரியான இணைகளைத் தெரிக.

(1) சாந்தோம் – போர்ச்சுகீசியர்கள்

(2) போர்ட் நோவா – டச்சுக்காரர்கள்

(3) தரங்கம்பாடி – ஆங்கிலேயர்கள்

(4) தேவனும்பட்டினம் – பிரெஞ்சுக்காரர்கள்

(A) (1) மற்றும் (3) சரியானவை
(B) (1) மற்றும் (2) சரியானவை
(C) (2) மற்றும் (3) சரியானவை
(D) (3) மற்றும் (4) சரியானவை

Choose the right matches among the following Settlements/ Headquarters

(1) Santhome – The Portuguese

(2) Port Nova – The Dutch

(3) Tranquebar – The English

(4) Devanampattinam – The French

(A) (1) and (3) are correct
(B) (1) and (2) are correct
(C) (2) and (3) are correct
(D) (3) and (4) are correct

விடை: (B) (1) மற்றும் (2) சரியானவை – சாந்தோம் – போர்ச்சுகீசியர், போர்ட்டோ நோவா – டச்சுக்காரர் சரி; தரங்கம்பாடி டேனியர், தேவனும்பட்டினம் (புனித டேவிட் கோட்டை) ஆங்கிலேயருடையது.

San Thome was Portuguese and Porto Novo a Dutch settlement; Tranquebar was Danish and Devanampattinam (Fort St. David) English.

வினா 15 · அலகு IV

பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

(1) நமக்கு நாமே திட்டம் – பயணிகள் நிழற்குடைகள்

(2) தோழி – மாதாந்திர உதவித்தொகை ரூ. 1,000

(3) நம்ம ஊரு சூப்பர் – அங்கன்வாடி மையங்கள்

(4) புதுமைப் பெண் திட்டம் – பெண்களுக்கான விடுதித் திட்டம்

(A) (1) மற்றும் (3)
(B) (2) மற்றும் (4)
(C) (1) மற்றும் (2)
(D) (3) மற்றும் (4)

Which of the following is incorrectly paired?

(1) Namakku Naame Thittam – Bus shelters

(2) Thozhi – Monthly allowance of Rs. 1,000

(3) Namma Ooru Superu – Anganwadis

(4) Pudhumai Penn Scheme – Hostel scheme for women

(A) (1) and (3)
(B) (2) and (4)
(C) (1) and (2)
(D) (3) and (4)

விடை: (B) (2) மற்றும் (4) – 'தோழி' – பணிபுரியும் மகளிர் விடுதி; 'புதுமைப் பெண்' – மாணவியருக்கு மாதம் ரூ.1,000 – இவை இரண்டும் மாற்றி இணைக்கப்பட்டுள்ளன.

'Thozhi' is the working-women's hostel scheme and 'Pudhumai Penn' gives Rs 1,000 a month to girl students – the two are swapped.

வினா 16 · அலகு IV

Dr. தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் தொடர்பான சரியான கூற்றினைக் கண்டறிக.

(i) இத்திட்டத்தில் பலனடைவதற்கு வருவாய் வரம்பு மற்றும் கல்வித் தகுதி வரையறுக்கப்பட்டுள்ளது.

(ii) பட்டம்/பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு ரூபாய் 50,000 வழங்கப்படுவதுடன் அதில் ரூபாய் 30,000 வங்கிக் கணக்கிலும் 20,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகிறது.

(iii) இவ்வாறு பட்டம்/பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு 8 கிராம் 22 காரட் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (ii) மட்டும்
(C) (i) மற்றும் (iii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்

Identify the correct statements about Dr. Dharmambal Ammaiyar Ninaivu Widow Remarriage Assistance Scheme.
(i) There is an income ceiling and educational qualification prescribed to avail benefit under the scheme.
(ii) The degree/diploma holders are given 50,000, out of which 30,000 through ECS and 20,000 given as National Savings Certificate.
(iii) The degree/diploma holders are also given 8 gram 22 carat gold coin.
(A) (i) only
(B) (i) and (ii) only
(C) (i) and (iii) only
(D) (ii) and (iii) only

விடை: (D) (ii) மற்றும் (iii) மட்டும் – இத்திட்டத்துக்கு வருமான வரம்பு, கல்வித் தகுதி இல்லை; பட்டம்/பட்டயதாரர்களுக்கு ரூ.50,000 (ரூ.30,000 ECS + ரூ.20,000 NSC) மற்றும் 8 கிராம் 22 காரட் தங்க நாணயம்.
The scheme has no income ceiling or educational qualification; graduates/diploma holders get Rs 50,000 (Rs 30,000 ECS + Rs 20,000 NSC) plus an 8 g 22-carat gold coin.

வினா 17 · அலகு IV

தமிழ்நாடு மாநில பொதுத்துறை நிறுவனங்கள் நிறுவப்பட்ட ஆண்டுடன் சரியாகப் பொருத்தவும்.

(a) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் – 1. 1949
(b) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் – 2. 1965
(c) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் – 3. 1971
(d) தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் – 4. 1972

(A) (a)-1 (b)-2 (c)-3 (d)-4
(B) (a)-1 (b)-4 (c)-3 (d)-2
(C) (a)-4 (b)-3 (c)-2 (d)-1
(D) (a)-1 (b)-4 (c)-2 (d)-3

Match correctly the Tamilnadu State Public Sector undertakings with their corresponding established year:
(a) Tamilnadu Industrial Investment Corporation – 1. 1949
(b) Tamilnadu Civil Supplies Corporation – 2. 1965
(c) Tamilnadu Industrial Development Corporation – 3. 1971
(d) State Industries Promotion Corporation of Tamilnadu – 4. 1972
(A) (a)-1 (b)-2 (c)-3 (d)-4
(B) (a)-1 (b)-4 (c)-3 (d)-2
(C) (a)-4 (b)-3 (c)-2 (d)-1
(D) (a)-1 (b)-4 (c)-2 (d)-3

விடை: (D) (a)-1 (b)-4 (c)-2 (d)-3 – TIIC 1949, TIDCO 1965, SIPCOT 1971, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972.
TIIC 1949, TIDCO 1965, SIPCOT 1971, TN Civil Supplies Corporation 1972.

வினா 18 · அலகு IV

கீழ்கண்ட வாக்கியங்களில், சரியான விடையை தேர்ந்தெடுக்க :

(i) கஸ்தூரிபா காந்தி பெண் குழந்தைகள் கல்வி நிலையங்கள் சென்னை மற்றும் தூத்துக்குடியில் அமைந்துள்ளது.

(ii) "எமிஸ்" - என்பது தமிழக அரசு ஊழியர்களின் குறைத்தீர்க்கும் இணைய தளமாகும்.

(iii) முதலமைச்சரின் "ஊட்டச்சத்து மிக்க காய்கறிகள் தோட்டத் திட்டமானது" "இல்லத்தரசிகளை" நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதால்

(iv) ஊட்டச்சத்துமிக்க காய்கறிகள் தோட்டத் திட்டமானது நகர்புற பகுதிகளுக்கானது மட்டுமாகும்.

(A) (i) மற்றும் (ii) மட்டும் சரி
(B) (ii) மற்றும் (iii) மட்டும் சரி
(C) (iii) மற்றும் (iv) மட்டும் சரி
(D) (iv) மற்றும் (i) மட்டும் சரி

Consider the following statements, choose the correct answer :
(i) Kasturba Gandhi Balika Vidyalaya located in Chennai and Thoothukudi District.
(ii) EMIS - is the Grievance Redressal Mechanisms for the TN Government Employees.
(iii) Chief Minister's "Nutritive Vegetable Garden Schemes" aimed towards "House wives".
(iv) The Nutritive Vegetable Garden Scheme is for the people living in the Urban areas.
(A) (i) and (ii) only correct
(B) (ii) and (iii) only correct
(C) (iii) and (iv) only correct
(D) (iv) and (i) only correct

விடை: (C) (iii) மற்றும் (iv) மட்டும் சரி – KGBV கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ளன; EMIS பள்ளிக் கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு – (i), (ii) தவறு; எனவே (iii), (iv).
KGBVs are in educationally backward blocks (not Chennai/Thoothukudi) and EMIS is the school Educational Management Information System, so (i),(ii) are false; only option C remains.

வினா 19 · அலகு II

கீழ்வருவனவற்றுள் சரியான இணைகளைத் தேர்வு செய்க.

(1) SiTN – எளிய தமிழகம்

(2) SeMT – மாநில மின் குறிக்கோள் குழு

(3) ARIVU – தமிழ்நாடு மின் ஆளுகை முகமை மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் இணைந்து உருவாக்கிய தமிழ் இயற்கை மொழி செயலாக்க வழி திறன்மிகு உரையாடல்

(4) CEET – வளர்ந்து வரும் மின்னணுத் தொழில்நுட்பங்களுக்கான மையம்

(A) (1) மற்றும் (2) மட்டும்
(B) (1) மற்றும் (3) மட்டும்
(C) (2) மற்றும் (3) மட்டும்
(D) (3) மற்றும் (4) மட்டும்

Choose the right matches from the following.

(1) SiTN – Simplify TN

(2) SeMT – State e-Mission Team

(3) ARIVU – Natural Language Processing Chatbot jointly developed by TNeGA and Anna University

(4) CEET – Centre for Emerging Electronic Technologies

(A) (1) and (2) only
(B) (1) and (3) only
(C) (2) and (3) only
(D) (3) and (4) only

விடை: (A) (1) மற்றும் (2) மட்டும் – TNeGA – AU-KBC உருவாக்கிய தமிழ் இயற்கைமொழி உரையாடல் மென்பொருள் 'ANIL'; ARIVU அல்ல. CEET = வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கான சிறப்பு மையம். எனவே (1), (2) சரி.

The TNeGA–AU-KBC Tamil NLP chatbot is 'ANIL', not ARIVU, and CEET is the Centre of Excellence in Emerging Technologies. (1) and (2) are correct.

வினா 20 · அலகு II

பின்வரும் அறிக்கைகளை கவனியுங்கள் :

கூற்று [A] : 'தாசில்தார்' என்ற சொல் முகலாயர் பயன்படுத்திய 'தாசில்' என்னும் சொல்லினடியாக உருவானது. அதாவது 'வருவாய் ஈட்டும் பகுதி' எனப் பொருள்படும்.

காரணம் [R] : தாலுகாக்கள், வட்டங்கள் என மறுபெயரிடப்பட்டதால், தாசில்தார்கள், வட்டாட்சியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி; மற்றும் [A] க்கு [R] சரியான விளக்கமாகும்.
(C) [A] தவறு, [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி; ஆனால் [A] க்கு [R] சரியான விளக்கம் அல்ல என்பது சரியானது.

Consider the following statements :

Assertion [A] : The word 'Tahsildar' is derived from the Mughal word 'tahsil', meaning 'revenue-generating area'.

Reason [R] : Since the 'Tahsil' were renamed as taluks, The Tahsildars were called Taluk Officers.

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

விடை: (D) [A] மற்றும் [R] இரண்டும் சரி; ஆனால் [A] க்கு [R] சரியான விளக்கம் அல்ல என்பது சரியானது. – 'தாசில்தார்' என்ற சொல் முகலாய வருவாய் அலகான 'தாசில்' என்பதிலிருந்து வந்தது. பின்னர் வட்டங்களாகப் பெயர் மாற்றம் உண்மை; ஆனால் அது சொல்லின் தோற்றத்தை விளக்காது.

'Tahsildar' comes from the Mughal revenue unit 'tahsil'. The later renaming of tahsils as taluks is true but does not explain the word's origin.

வினா 21 · அலகு II

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் பணிவிதிகள் உருவாக்கப்பட்டுள்ளன?

(A) பிரிவு 360
(B) பிரிவு 365
(C) பிரிவு 309
(D) பிரிவு 311

Tamilnadu Government Service Rules are made under the provision of power confered by Indian Constitution provides in

(A) Article 360
(B) Article 365
(C) Article 309
(D) Article 311

விடை: (C) பிரிவு 309 – பிரிவு 309 (காப்புரை) மாநில அரசுப் பணியாளர்களின் நியமனம், பணி நிபந்தனைகள் குறித்து விதிகள் இயற்ற ஆளுநருக்கு அதிகாரம் தருகிறது.

Article 309 (proviso) empowers the Governor to make rules on recruitment and conditions of service of State government servants.

வினா 22 · அலகு II

தமிழ்நாடு நிர்வாகத்தின் பரிணாம வளர்ச்சி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத இணை எது?

(1) 1800 – அரசியல் துறை

(2) 1751 – திருச்சபைத் துறை

(3) 1843 – பொதுப்பணித்துறை

(4) 1809 – தலைமைச் செயலாளர் பதவி

(A) (1) மற்றும் (3) (B) (2) மற்றும் (4)

(C) (2) மற்றும் (3) (D) (3) மற்றும் (4)

Which of the following are related to evolution of Tamilnadu Administration is incorrectly paired?

(1) 1800 – Political Department

(2) 1751 – Ecclesiastical Department

(3) 1843 – Public Works Department

(4) 1809 – Post of Chief Secretary

(A) (1) and (3) (B) (2) and (4)

(C) (2) and (3) (D) (3) and (4)

விடை: (B) (2) மற்றும் (4) – சென்னை திருச்சபைத் துறை 19-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் உருவானது, 1751 அல்ல. தலைமைச் செயலாளர் பதவி 1809-க்கு முன்பே இருந்தது. எனவே (2), (4) தவறு.

The Madras Ecclesiastical Department dates from the early 19th century, not 1751, and the post of Chief Secretary existed before 1809. So (2) and (4) are wrongly paired.

வினா 23 · அலகு IV

சிறப்பு தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பது தொடர்பாக பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

(1) PECS – படமாற்ற செய்தி தொடர்பு முறை

(2) ADHD – கவன இருப்பு செயலிழப்பு குறைபாடு மற்றும் அதி ஊக்க செயற்பாடு குறைபாடு

(3) ABA – நடைமுறை நடத்தையில் பகுப்பாய்வு

(4) ASD – மன இறுக்கம்/மதியிறுக்க நரம்பியல் கோளாறு குறைபாடு

(A) (1) மற்றும் (3) (B) (2) மற்றும் (4)

(C) (2) மற்றும் (3) (D) (1) மற்றும் (4)

Which of the following is incorrectly paired with regard to educating children with special needs?

(1) PECS – Picture Exchange Communication System

(2) ADHD – Attention Disorder and Hyperactivity Deficit

(3) ABA – Applied Behaviour Analysis

(4) ASD – Autism Spectrum Deficiency

(A) (1) and (3) (B) (2) and (4)

(C) (2) and (3) (D) (1) and (4)

விடை: (B) (2) மற்றும் (4) – ADHD = Attention Deficit Hyperactivity Disorder; ASD = Autism Spectrum Disorder – (2), (4) தவறு.

ADHD = Attention Deficit Hyperactivity Disorder and ASD = Autism Spectrum Disorder; PECS and ABA are correct.

வினா 24 · அலகு III

கீழ்கண்டவற்றை பொருத்துக :

விண்வெளி மையம் / நிலையம் – இடம்

(a) விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் – 1. அந்தமான் தீவுகள் - போர்ட்பிளேயர்

(b) சதீஷ் தவான் விண்வெளி மையம் – 2. டேராடூன்

(c) இந்திய தொலைதூர உணர்வு நிறுவனம் – 3. ஸ்ரீ ஹரிகோட்டா

(d) கீழ் எல்லை நிலையம் – 4. திருவனந்தபுரம்

(A) (a)-4 (b)-3 (c)-2 (d)-1 (B) (a)-3 (b)-2 (c)-4 (d)-1

(C) (a)-2 (b)-3 (c)-1 (d)-4 (D) (a)-2 (b)-4 (c)-3 (d)-1

Match the following :

Space Station/Centre – Place

(a) Vikram Sarabai Space Centre – 1. Andaman Islands – Port Blair

(b) Satish Dhawan Space Centre – 2. Dehradun

(c) Indian Institute of Remote Sensing – 3. Sriharikota

(d) Down Range Station – 4. Thiruvananthapuram

(A) (a)-4 (b)-3 (c)-2 (d)-1 (B) (a)-3 (b)-2 (c)-4 (d)-1

(C) (a)-2 (b)-3 (c)-1 (d)-4 (D) (a)-2 (b)-4 (c)-3 (d)-1

விடை: (A) (a)-4 (b)-3 (c)-2 (d)-1 – VSSC – திருவனந்தபுரம், SDSC – ஸ்ரீஹரிகோட்டா, IIRS – டேராடூன், கீழ் எல்லை நிலையம் – போர்ட்பிளேயர்.

VSSC – Thiruvananthapuram, SDSC SHAR – Sriharikota, IIRS – Dehradun, Down Range Station – Port Blair.

வினா 25 · அலகு II

கீழ்க்காணும் கூற்றுகளைக் கருதுக மற்றும் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

(1) பொது கொள்முதல் இந்தியாவில், அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 – 25% ஐ அடைந்தது.

(2) அரசாங்கத்தின் மின்-சந்தை இடம், ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்கான வாகனமாக உருவகப்படுத்தப்படுகிறது.

(3) அரசாங்கத்தின் மின்-சந்தை இடமானது, அனைத்தும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் ஊழல் இல்லா நல்லாட்சியை ஊக்குவிக்கிறது.

(4) அரசாங்க மின் சந்தை இடமானது, ஓர் எண்ணிலக்கத் தொகுப்பாகும், 2006 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

(A) (1) மற்றும் (2) மட்டும் சரி
(B) (3), (2) மற்றும் (1) மட்டும் சரி
(C) (3) மற்றும் (4) மட்டும் சரி
(D) (1) மட்டும் சரி

Consider the following statements and choose the correct answer.
(1) Public procurement in India reached upto 20-25% of the GDP
(2) Government e-Market place (GeM) was conceptualised as a special purpose vehicle.
(3) Government e-Market promotes inclusive development, corruption – free governance.
(4) Government e-Market place in the digital portal was set up in August 2006.
(A) (1) and (2) are correct
(B) (3), (2) and (1) are correct
(C) (3) and (4) only correct
(D) (1) only correct

விடை: (B) (3), (2) மற்றும் (1) மட்டும் சரி – GeM இணையதளம் 9 ஆகஸ்ட் 2016-இல் தொடங்கப்பட்டது (2006 அல்ல); GeM சிறப்பு நோக்க நிறுவனம் நடத்துகிறது. பொதுக் கொள்முதல் GDP-யில் சுமார் 20–25%.
The GeM portal was launched on 9 August 2016 (not 2006) and is run by the GeM SPV. Public procurement is about 20–25% of GDP, and GeM promotes transparent, inclusive procurement.

வினா 26 · அலகு II

கீழ்வருவனவற்றைப் பொருத்துக.

சட்ட உறுப்பு – பொருள்

(a) விதி 243 A – 1. கிராம சபை

(b) விதி 243 I – 2. மாநில நிதி குழு

(c) விதி 243 K – 3. மாநில தேர்தல் ஆணையம்

(d) விதி 243 O – 4. நீதிமன்றத் தலையீடு தடை

(A) (a)-1 (b)-2 (c)-3 (d)-4
(B) (a)-2 (b)-3 (c)-1 (d)-4
(C) (a)-1 (b)-3 (c)-2 (d)-4
(D) (a)-3 (b)-1 (c)-2 (d)-4

Match the following :
Article Provision – Subject
(a) Article 243 A – 1. Gram Sabha
(b) Article 243 I – 2. State Finance Commission
(c) Article 243 K – 3. State Election Commission
(d) Article 243 O – 4. Bar to interference by Courts
(A) (a)-1 (b)-2 (c)-3 (d)-4
(B) (a)-2 (b)-3 (c)-1 (d)-4
(C) (a)-1 (b)-3 (c)-2 (d)-4
(D) (a)-3 (b)-1 (c)-2 (d)-4

விடை: (A) (a)-1 (b)-2 (c)-3 (d)-4 – விதி 243A கிராம சபை, 243I மாநில நிதி ஆணையம், 243K மாநில தேர்தல் ஆணையம், 243O நீதிமன்றத் தலையீட்டுத் தடை.
Art 243A Gram Sabha, 243I State Finance Commission, 243K State Election Commission, 243O bar to interference by courts.

வினா 27 · அலகு II

கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பொருத்துக.

(a) தார் ஆணையம் – 1. பஞ்சாயத்து ராஜ்

(b) மண்டல் ஆணையம் – 2. அடிப்படைக் கடமைகள்

(c) ஸ்வரண் சிங் குழு – 3. மாநிலங்களின் மறுசீரமைப்பு

(d) அசோக் மேத்தா குழு – 4. இட ஒதுக்கீடு

(A) (a)-3 (b)-4 (c)-2 (d)-1
(B) (a)-1 (b)-3 (c)-4 (d)-2
(C) (a)-2 (b)-1 (c)-3 (d)-4
(D) (a)-4 (b)-2 (c)-1 (d)-3

Match the following given below :
(a) Dhar Commission – 1. Panchayat Raj
(b) Mandal Commission – 2. Fundamental Duties
(c) Swaran Singh Committee – 3. States – Reorganisation
(d) Ashok Mehta Committee – 4. Reservation
(A) (a)-3 (b)-4 (c)-2 (d)-1
(B) (a)-1 (b)-3 (c)-4 (d)-2
(C) (a)-2 (b)-1 (c)-3 (d)-4
(D) (a)-4 (b)-2 (c)-1 (d)-3

விடை: (A) (a)-3 (b)-4 (c)-2 (d)-1 – தார் ஆணையம் – மாநில மறுசீரமைப்பு; மண்டல் – இடஒதுக்கீடு; ஸ்வரண் சிங் – அடிப்படைக் கடமைகள்; அசோக் மேத்தா – பஞ்சாயத்து ராஜ்.
Dhar Commission (1948) – linguistic states; Mandal – OBC reservation; Swaran Singh (1976) – Fundamental Duties; Ashok Mehta (1977) – Panchayati Raj.

வினா 28 · அலகு II

கீழ்க்கண்ட இந்திய அரசமைப்பின் சட்டப்பிரிவுகளை அவற்றுடன் தொடர்புடைய அம்சங்களுடன் பொருத்துக.

(a) சட்டப்பிரிவு 178 – 1. ஓர் சபாநாயகரின் பணிகளைச் செய்வதற்கான துணை சபாநாயகரின் அதிகாரம்

(b) சட்டப்பிரிவு 180 – 2. சட்டமன்ற சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர்

(c) சட்டப்பிரிவு 182 – 3. சட்டமன்ற மேலவையின் தலைவராகச் செயல்படுவதற்கான துணைத் தலைவரின் அதிகாரம்

(d) சட்டப்பிரிவு 184 – 4. சட்டமன்ற மேலவையின் தலைவர் மற்றும் துணைத் தலைவர்

(A) (a)-3 (b)-4 (c)-1 (d)-2
(B) (a)-2 (b)-4 (c)-1 (d)-3
(C) (a)-2 (b)-1 (c)-4 (d)-3
(D) (a)-1 (b)-4 (c)-3 (d)-2

Match the following Articles of the Indian Constitution with the Provisions concerned :

(a) Article 178 – 1. Power of Deputy Speaker to perform the duties of Speaker

(b) Article 180 – 2. The Speaker and Deputy Speaker of the Legislative Assembly

(c) Article 182 – 3. Power of Deputy Chairman to perform the duties of Chairman

(d) Article 184 – 4. The Chairman and Deputy Chairman of the Legislative Council

(A) (a)-3 (b)-4 (c)-1 (d)-2
(B) (a)-2 (b)-4 (c)-1 (d)-3
(C) (a)-2 (b)-1 (c)-4 (d)-3
(D) (a)-1 (b)-4 (c)-3 (d)-2

விடை: (C) (a)-2 (b)-1 (c)-4 (d)-3 – பிரிவு 178 சபாநாயகர், துணை சபாநாயகர்; 180 சபாநாயகர் பணியைத் துணை சபாநாயகர் செய்தல்; 182 மேலவைத் தலைவர், துணைத் தலைவர்; 184 துணைத் தலைவர் அதிகாரம்.

Art 178 Speaker & Deputy Speaker; 180 Deputy Speaker acting as Speaker; 182 Chairman & Deputy Chairman of Council; 184 Deputy Chairman acting as Chairman.

வினா 29 · அலகு II

இந்திய அரசியலமைப்பை திருத்துவதற்கு, எந்த அம்சத்திற்கு குறைந்தது பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல் அளிக்க வேண்டும்?

(i) புதிய வழிகாட்டுதல் கொள்கையை சேர்த்தல்

(ii) அடிப்படை உரிமைகளை நீக்குதல்

(iii) உச்ச நீதிமன்ற அதிகாரங்களில் திருத்தம்

(iv) மாநிலங்களின் அதிகாரங்களில் மாற்றம்

(A) (i) மற்றும் (iii) மட்டும்
(B) (i) மற்றும் (ii) மட்டும்
(C) (ii) மற்றும் (iii) மட்டும்
(D) (iii) மற்றும் (iv) மட்டும்

Which of the following feature for amending Indian Constitution requires ratification by not less than half of the State legislatures?

(i) Addition of a new principle

(ii) Abolition of Fundamental Rights

(iii) Amendment is the power of the Supreme Court

(iv) Change in the powers of the States

(A) (i) and (iii) only
(B) (i) and (ii) only
(C) (ii) and (iii) only
(D) (iii) and (iv) only

விடை: (D) (iii) மற்றும் (iv) மட்டும் – பிரிவு 368(2) காப்புரைப்படி உச்ச நீதிமன்றம் மற்றும் மத்திய–மாநில அதிகாரப் பகிர்வு திருத்தங்களுக்கு பாதி மாநிலங்களின் ஒப்புதல் தேவை.

Under the proviso to Art 368(2), changes to the Union judiciary (Supreme Court) and to Centre–State distribution of powers need ratification by half the States.

வினா 30 · அலகு II

காரணங்கள், கூற்று வகை :

கூற்று [A] : அமைச்சர்களை நியமிப்பதிலும் அவர்களுக்கான பணிகளை ஒதுக்கீடு செய்வதிலும் பிரதம மந்திரிக்கு எவ்வித பொறுப்பும் இல்லை.

காரணம் [R] : பிரதம மந்திரி மக்களவையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவராக இருப்பதுடன் அவர் அமைச்சரவையின் தலைவராகவும் இருப்பார்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு.
(B) [A] தவறு, ஆனால் [R] சரி.
(C) [A] மற்றும் [R] இரண்டும் சரி [R] என்பது [A] என்பதன் சரியான விளக்கம் ஆகும்.
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A] யின் சரியான விளக்கம் அல்ல.

Reason and Assertion type :

Assertion [A] : The Prime Minister is not responsible for the appointment of the Ministers and allocation of work among them.

Reason [R] : The Prime Minister is the leader of the majority party in the Lok-Sabha and also he is the Head of the Council of Ministers

(A) [A] is true, but [R] is false.
(B) [A] is false, but [R] is true.
(C) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A].
(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A].

விடை: (B) [A] தவறு, ஆனால் [R] சரி. – பிரதமரின் ஆலோசனையின் பேரில் அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர் (பிரிவு 75); இலாகா ஒதுக்கீடும் பிரதமரே – A தவறு, R சரி.

Ministers are appointed by the President on the PM's advice (Art 75) and the PM allocates portfolios, so A is false; R is true.

வினா 31 · அலகு II

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட எது/எவை அடிப்படைக் கடமைகளில் இல்லை.

(a) இயற்கை சூழலைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும்.

(b) பொது சொத்துகளைப் பாதுகாப்பதும் வன்முறையைக் கைவிடுவதும்.

(c) சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவது.

(A) (a) மட்டும்
(B) (a) மற்றும் (b)
(C) (c) மட்டும்
(D) (b) மற்றும் (c)

Under Indian Constitution which of the following is/are not a Fundamental Duties?

(a) To protect and improve the natural environment.

(b) To safeguard public property and to abjure violence.

(c) To promote International peace and security.

(A) (a) only
(B) (a) and (b)
(C) (c) only
(D) (b) and (c)

விடை: (C) (c) மட்டும் – சர்வதேச அமைதி மேம்பாடு வழிகாட்டு நெறிமுறை (பிரிவு 51); (a), (b) அடிப்படைக் கடமைகள் (பிரிவு 51A(g), (i)).
Promotion of international peace and security is a Directive Principle (Art 51), not a Fundamental Duty; (a) and (b) are in Art 51A(g), (i).

வினா 32 · அலகு II

பின்வரும் அறிக்கைகளை கவனியுங்கள் :

கூற்று [A] : மாநில நிதியிலுல் முழுமையாக வழங்கப்படும் எந்தக் கல்வி நிறுவனத்திலும் மத போதனைகள் வழங்கப்படலாம்.

காரணம் [R] : ஓர் அரசு அனைத்து மதங்கள் மீதும் நடுநிலை மற்றும் பாரபட்சமற்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(A) கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு
(B) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி; மேலும், காரணம் [R] கூற்று [A]-க்கான சரியான விளக்கமாகும்
(C) கூற்று [A] தவறு, காரணம் [R] சரி
(D) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி; மேலும், காரணம் [R], கூற்று [A]-க்குச் சரியான விளக்கமல்ல.

Consider the following statements :

Assertion [A] : Religions instruction shall be provided in any educational institution wholly provided by the State funds

Reason [R] : A State should maintains a neutral and impartial attitude towards all religions.

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

விடை: (C) கூற்று [A] தவறு, காரணம் [R] சரி – பிரிவு 28(1): முழுமையாக அரசு நிதியில் நடக்கும் கல்வி நிறுவனங்களில் மத போதனை கூடாது – A தவறு; அரசின் மத நடுநிலை – R சரி.
Art 28(1): no religious instruction in institutions wholly maintained out of State funds – A is false; State neutrality towards religions (secularism) is true.

வினா 33 · அலகு II

அமைச்சர் ஒருவர் தமிழக அமைச்சரவையில் இருந்து பதவி விலக முடிவெடுத்தால் யாரிடம் தனது பதவி விலகல் கடிதத்தைக் கொடுக்க வேண்டும்?

(A) முதலமைச்சரிடம்
(B) ஆளுநரிடம்
(C) சட்டமன்றப் பேரவைத் தலைவரிடம்
(D) தான் சார்ந்திருக்கும் அரசியல் கட்சியின் தலைவரிடம்

In case, a member of the Tamilnadu Cabinet wants to resign his/her Ministerial post; to whom he/she may submit the resignation letter?

(A) To the Chief Minister
(B) To the Governor
(C) To the Speaker of the Legislative Assembly
(D) To the President of his/her political party

விடை: (A) முதலமைச்சரிடம் – மரபுப்படி அமைச்சர் பதவி விலகல் கடிதத்தை முதலமைச்சரிடம் தருவார்; முதலமைச்சர் அதை ஏற்கப் பரிந்துரைத்து ஆளுநருக்கு அனுப்புவார்.
By convention a Minister sends the resignation to the Chief Minister, who forwards it to the Governor with a recommendation to accept (e.g. Senthil Balaji, Feb 2024).

வினா 34 · அலகு II

இந்திய அரசமைப்பின்படி குடியுரிமை இழப்பானது கீழ்க்கண்டவற்றின் வழி ஏற்படுகிறது.

(1) இந்திய குடியுரிமையை பெற்றிருக்கும் ஒருவர் தானாக முன்வந்து பிற நாட்டின் குடியுரிமையை பெறுதல்.

(2) இந்திய குடிமகனாக இருக்கும் ஒருவர் தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் அயல்நாட்டில் தங்கியிருத்தல்.

(3) இந்திய குடிமகனாக இருக்கும் ஒருவர் இரண்டாண்டுகளுக்கு குறைவில்லாமல் பிற நாட்டில் தண்டனை பெற்றிருந்தால்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும் :

(A) (1) மற்றும் (2) மட்டும்
(B) (2) மற்றும் (3) மட்டும்
(C) (2) மட்டும்
(D) (1), (2), (3) ஆகிய அனைத்தும்

The ways of losing citizenship under the Constitution of India are
(1) When an Indian citizen voluntarily acquires the citizenship of another country.
(2) The citizen has been ordinarily resident out of India for seven years continuously.
(3) The citizen has been imprisoned in any country for two years.
Select the correct answer using code given below :
(A) (1) and (2) only
(B) (2) and (3) only
(C) (2) only
(D) (1), (2) and (3)

விடை: (D) (1), (2), (3) ஆகிய அனைத்தும் – குடியுரிமைச் சட்டம் 1955: பிற நாட்டுக் குடியுரிமை பெற்றால் முடிவு (பிரிவு 9); தொடர்ந்து 7 ஆண்டு வெளிநாட்டில் வசித்தல், 2 ஆண்டுக்குக் குறையாத சிறைத்தண்டனை – பறிப்புக்கான காரணங்கள் (பிரிவு 10).
Citizenship Act 1955: voluntary acquisition of foreign citizenship ends it (s.9); a registered/naturalised citizen can be deprived for 7 years' continuous residence abroad or imprisonment of 2+ years in any country within 5 years (s.10).

வினா 35 · அலகு II

சரியான பொருத்தத்தை தெரிவு செய்க.

(1) இங்கிலாந்து – ஈரவை

(2) சோவியத் ரஷ்யா – சுதந்திரமான நீதிமன்றம்

(3) ஆஸ்திரேலியா – ஐந்தாண்டுத் திட்டங்கள்

(4) அமெரிக்கா – உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்குதல்

(A) (1) மற்றும் (3)
(B) (2) மற்றும் (3)
(C) (1) மற்றும் (4)
(D) (4) மற்றும் (2)

Choose the right matches.
(1) UK – Bicameral Legislature
(2) USSR – Independent Judiciary
(3) Australia – Five Year Plan
(4) US – Removal of Supreme Court and High Court Judges
(A) (1) and (3)
(B) (2) and (3)
(C) (1) and (4)
(D) (4) and (2)

விடை: (C) (1) மற்றும் (4) – ஈரவை முறை – இங்கிலாந்து; நீதிபதிகள் நீக்கம் – அமெரிக்கா சரி; சுதந்திர நீதித்துறை அமெரிக்காவிலிருந்து, ஐந்தாண்டுத் திட்டம் சோவியத்திலிருந்து.
Bicameralism is borrowed from the UK and removal of SC/HC judges from the USA; independent judiciary is from the USA and five-year plans from the USSR.

வினா 36 · அலகு II

சரியான பொருத்தத்தை தேர்வு செய்க.

(1) அரைகுறை கூட்டாட்சி – கே.சி. வேர்

(2) பேரம்பேசும் கூட்டாட்சி வாதம் – சி.ஆர். தாஸ்

(3) கூட்டுறவு கூட்டாட்சி வாதம் – கிரான்வில்லே ஆஸ்டின்

(4) மையப்படுத்தும் போக்கு கொண்ட கூட்டாட்சி – ஜவஹர்லால் நேரு

(A) (1) மற்றும் (3) மட்டும்
(B) (1) மற்றும் (2) மட்டும்
(C) (2) மற்றும் (3) மட்டும்
(D) (3) மற்றும் (4) மட்டும்

Choose the right matches
(1) Quasi-Federal – K.C. Wheare
(2) Bargaining Federalism – C.R. Dass
(3) Co-operative Federalism – Granville Austin
(4) Federation with a Centralising Tendency – Jawaharlal Nehru
(A) (1) and (3) only
(B) (1) and (2) only
(C) (2) and (3) only
(D) (3) and (4) only

விடை: (A) (1) மற்றும் (3) மட்டும் – கே.சி. வேர் – அரைக் கூட்டாட்சி; கிரான்வில் ஆஸ்டின் – கூட்டுறவுக் கூட்டாட்சி; பேரக் கூட்டாட்சி – மோரிஸ் ஜோன்ஸ்; மையப்படுத்தும் கூட்டாட்சி – ஐவர் ஜென்னிங்ஸ்.
K.C. Wheare – quasi-federal; Granville Austin – cooperative federalism; 'bargaining federalism' is Morris-Jones and 'federation with centralising tendency' is Ivor Jennings.

வினா 37 · அலகு III

பின்வரும் நிகழ்வுகளை புவியியல் பகுதியின் அடிப்படையில் காலவரிசைப்படி வரிசைப்படுத்தவும்.

(1) WAN

(2) PAN

(3) MAN

(4) LAN

(A) (1), (2), (3), (4)
(B) (2), (4), (3), (1)
(C) (2), (3), (4), (1)
(D) (3), (4), (2), (1)

Arrange the following events in chronological order based on geographical area

(1) WAN

(2) PAN

(3) MAN

(4) LAN

(A) (1), (2), (3), (4)
(B) (2), (4), (3), (1)
(C) (2), (3), (4), (1)
(D) (3), (4), (2), (1)

விடை: (B) (2), (4), (3), (1) – பரப்பளவு அடிப்படையில்: PAN < LAN < MAN < WAN.
By coverage area: Personal (PAN) < Local (LAN) < Metropolitan (MAN) < Wide (WAN).

வினா 38 · அலகு III

பின்வரும் அறிக்கைகளை கவனியுங்கள் :

கூற்று [A] : தொடர்புடைய தரவுத்தளத்தில் ஒரு அட்டவணையில் உள்ள வெளிநாட்டு விசை மற்றொரு அட்டவணையில் உள்ள முதன்மை விசையை குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது.

காரணம் [R] : அட்டவணைகளுக்கு இடையே உள்ள ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்த Foreign key பயன்படுத்தப்படுகிறது.

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி
(C) [A] மற்றும் [R] இரண்டும் தவறு
(D) [A] தவறு ஆனால் [R] சரி

Consider the following statements :

Assertion [A] : In relational database a foreign key in one table is used to reference the primary key in another table.

Reason [R] : Foreign key is used to ensure the referential integrity between table.

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true
(C) Both [A] and [R] are false
(D) [A] is false but [R] is true

விடை: (B) [A] மற்றும் [R] இரண்டும் சரி – அயல் விசை (foreign key) மற்றொரு அட்டவணையின் முதன்மை விசையைக் குறிக்கிறது; இதனால் குறிப்பு ஒருமைப்பாடு உறுதியாகிறது – இரண்டும் சரி.
A foreign key references the primary key of another table and thereby enforces referential integrity – both are true.

வினா 39 · அலகு III

தவறான பொருத்தங்களை தேர்வு செய்க.

(1) ஆல்பர்ட் புரூஸ் சபின் – உயிருள்ள போலியோ தடுப்பூசி

(2) மேக்ஸ் தெய்லர் – BCG தடுப்பூசி

(3) ஜோனஸ் சால்க் – கொல்லப்பட்ட போலியோ தடுப்பூசி

(4) ஆல்பர்ட் கால்மெட் – மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசி

(A) (1) மற்றும் (3)
(B) (1) மற்றும் (2)
(C) (2) மற்றும் (4)
(D) (3) மற்றும் (4)

Choose the incorrect matches

(1) Albert Bruce Sabin – Live Polio Vaccine

(2) Max Theiler – BCG Vaccine

(3) Jonas Salk – Killed Polio Vaccine

(4) Albert Calmette – Yellow Fever Vaccine

(A) (1) and (3)
(B) (1) and (2)
(C) (2) and (4)
(D) (3) and (4)

விடை: (C) (2) மற்றும் (4) – மேக்ஸ் தெய்லர் – மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசி; கால்மெட் (குவெரினுடன்) – BCG – (2), (4) தவறு.
Max Theiler developed the yellow fever vaccine and Albert Calmette (with Guérin) the BCG – (2) and (4) are swapped.

வினா 40 · அலகு III

எம்.எஸ் சுவாமிநாதனைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) அவர் இந்தியப் பசுமைப் புரட்சியின் தந்தை ஆவார்

(ii) அவர் ஒரு வேளாண் விஞ்ஞானி மற்றும் தாவர மரபியல் நிபுணர்

(iii) அவர் "பருத்தி" எனும் புத்தகத்தை எழுதினார்

(iv) அவர் சடுதி மாற்றப் பயிர்ப் பெருக்கத்தின் ஒரு முன்னோடியாவார்

(A) (i), (ii) மற்றும் (iii) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i), (ii) மற்றும் (iv) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்

Which of the following statements are true about M.S. Swaminathan?
(i) He was the Father of Green Revolution in India
(ii) He was an Agronomist and Plant Geneticist
(iii) He wrote the book "Cotton"
(iv) He was a Pioneer in mutation plant breeding
(A) (i), (ii) and (iii) only
(B) (i) and (iii) only
(C) (i), (ii) and (iv) only
(D) (ii) and (iii) only

விடை: (C) (i), (ii) மற்றும் (iv) மட்டும் – எம்.எஸ். சுவாமிநாதன் – வேளாண் விஞ்ஞானி, தாவர மரபியலாளர், பசுமைப் புரட்சியின் தந்தை, சடுதிமாற்றப் பயிர்ப்பெருக்க முன்னோடி; 'பருத்தி' நூல் அவருடையதல்ல.
M.S. Swaminathan, agronomist and plant geneticist, is called the father of India's Green Revolution and pioneered mutation breeding; he did not write a book titled 'Cotton'.

வினா 41 · அலகு III

மூலக்கூறு நோயறிதலில் குறிப்பிட்ட டிஎன்ஏ வரிசைகளைக் கண்டறிய பயன்படும் கருவியைக் குறிப்பிடவும்

(A) தெற்கு ப்ளாட்டிங் (சதன் ப்ளாட்டிங்)
(B) ELISA
(C) PCR
(D) ப்ளோ சைட்டோமெட்ரி

Mention the tool used for detecting specific DNA sequences in molecular diagnostics.
(A) Southern Blotting
(B) ELISA
(C) PCR
(D) Flow cytometry

விடை: (C) PCR – குறிப்பிட்ட DNA வரிசைகளைப் பெருக்கிக் கண்டறியும் PCR மூலக்கூறு நோயறிதலின் முதன்மைக் கருவி; ELISA புரதங்களையும், ஓட்ட உயிரணு அளவியல் செல்களையும் ஆய்கின்றன.
PCR amplifies and detects specific DNA sequences and is the standard molecular-diagnostic tool. ELISA detects proteins and flow cytometry analyses cells.

வினா 42 · அலகு III

சரியான விடையைத் தேர்ந்தெடு :

(1) இயற்கை பாலிமர் – DNA

(2) செயற்கை பாலிமர் – PVC

(3) சேர்க்கை பல்படியாக்கல் – H2O, HCl, NH3 விடுபடல்

(4) குறுக்க பல்படியாக்கல் – மோனோமர் சேர்க்கை

(A) (1) மற்றும் (4) சரியானது
(B) (2) மற்றும் (3) சரியானது
(C) (1) மற்றும் (2) சரியானது
(D) (4) மற்றும் (3) சரியானது

Choose the correct answer :
(1) Natural Polymer – DNA
(2) Synthetic Polymer – PVC
(3) Addition Polymerisation – Loss of H2O, HCl, NH3
(4) Condensation Polymerisation – Monomer Addition
(A) (1) and (4) are correct
(B) (2) and (3) are correct
(C) (1) and (2) are correct
(D) (4) and (3) are correct

விடை: (C) (1) மற்றும் (2) சரியானது – DNA இயற்கை பாலிமர், PVC செயற்கை பாலிமர்; சிறு மூலக்கூறு வெளியேற்றம் குறுக்க (condensation) பல்படியாக்கலுக்கு, மோனோமர் சேர்க்கை சேர்க்கை பல்படியாக்கலுக்கு உரியது.
DNA is a natural and PVC a synthetic polymer; loss of small molecules (H2O, HCl, NH3) marks condensation, and simple monomer addition marks addition polymerisation – (3),(4) are swapped.

வினா 43 · அலகு III

வாயு எரிபொருட்களை அவற்றோடு தொடர்புடைய கலோரிப் பெறுமானத்துடன் சரியாகப் பொருத்தவும் :

(a) எண்ணெய் வாயு – 1. 12,000 – 14,000 கிலோ கலோரிகள்/கன சதுர மீட்டர்

(b) இயற்கை வாயு – 2. 4,500 – 5,400 கிலோ கலோரிகள்/கன சதுர மீட்டர்

(c) உற்பத்தி வாயு – 3. 27,800 கிலோ கலோரிகள்/கன சதுர மீட்டர்

(d) திரவ பெட்ரோலிய வாயு – 4. 1,300 கிலோ கலோரிகள்/கன சதுர மீட்டர்

(A) (a)-2 (b)-1 (c)-4 (d)-3
(B) (a)-2 (b)-3 (c)-4 (d)-1
(C) (a)-4 (b)-1 (c)-2 (d)-3
(D) (a)-4 (b)-2 (c)-1 (d)-3

Match correctly the gaseous fuels with their corresponding calorific values :

(a) Oil gas – 1. 12,000 to 14,000 K.cal/m^3

(b) Natural gas – 2. 4,500 to 5,400 K.cal/m^3

(c) Producer gas – 3. 27,800 K.cal/m^3

(d) Liquefied petroleum gas – 4. 1,300 K.cal/m^3

(A) (a)-2 (b)-1 (c)-4 (d)-3
(B) (a)-2 (b)-3 (c)-4 (d)-1
(C) (a)-4 (b)-1 (c)-2 (d)-3
(D) (a)-4 (b)-2 (c)-1 (d)-3

விடை: (A) (a)-2 (b)-1 (c)-4 (d)-3 – உற்பத்தி வாயு மிகக் குறைவு (~1,300), LPG மிக அதிகம் (~27,800); எண்ணெய் வாயு 4,500–5,400, இயற்கை வாயு 12,000–14,000 கி.கலோரி/மீ³.

Producer gas has the lowest (~1,300 kcal/m³) and LPG the highest (~27,800) value; oil gas is ~4,500–5,400 and natural gas ~12,000–14,000 kcal/m³.

வினா 44 · அலகு III

இதனை மாற்றுவதற்கு ஷ்மிட் தூண்டுதல் சுற்று முக்கியமாக உபயோகிக்கப்படுகிறது.

(A) மிதமாக மாறுபடும் உள்ளீட்டை திடீர் என்று மாறுபடும் வெளியீட்டு அலைவடிவமாக மாற்றுவதற்கு
(B) மாறு உள்ளீட்டை மாறு வெளியீடாக மாற்றுவதற்கு அலைவடிவம் தர
(C) திடீர் என்று மாறுபடும் உள்ளீட்டை மிதமாக மாறுபடும் வெளியீடாக மாற்றுவதற்கு
(D) ரம்பப்பல் போன்ற அலைவடிவத்தை ஒரு சதுர அலைவடிவமாக மாற்றுவதற்கு

The most important use of Schmitt trigger circuit is to convert

(A) A very slowly varying input voltage into an output having an abrupt waveform
(B) Steady input into a steady output waveform
(C) Abrupt input into a very slowly varying output
(D) A Sawtooth waveform to a square waveform

விடை: (A) மிதமாக மாறுபடும் உள்ளீட்டை திடீர் என்று மாறுபடும் வெளியீட்டு அலைவடிவமாக மாற்றுவதற்கு – ஷ்மிட் தூண்டி (hysteresis உடைய ஒப்பீட்டி) மெதுவாக மாறும் உள்ளீட்டை திடீர் மாற்றங்களுடைய சதுர வெளியீடாக மாற்றுகிறது – இதுவே அதன் முதன்மைப் பயன்.

A Schmitt trigger (comparator with hysteresis) squares up a slowly varying input into an output with sharp (abrupt) transitions – its standard textbook use.

வினா 45 · அலகு III

நானோபொருட்கள் தொகுப்பாக்கத்தின் நுட்பம் தொடர்பாக கீழ்காணும் கூற்றுகளில் எது/எவை சரியானது/(வை)?

(i) ஓர் அமைப்பு சமநிலையில் உள்ளபோது ஆற்றல் கசிவின்றி நிகழும் மூலக்கூறுகளின் ஒழுங்கு அமைப்பாண்மையை நிலைம சுய அமைப்பாக்கம் எனலாம்.

(ii) மின் அயனிக்கற்றை கல் அச்சு கலையில் மின் காந்த அலைக் கற்றையைக் கொண்டு நானோ அளவீடுகளில் தொகுப்புச்சுற்று வடிவம் உருவாக்கப்படுகிறது.

(iii) ஒரு மேற்தளத்தில் வேதிப்பொருள்படிவிற்குரிய நானோ அளவீட்டு எழுதுமுனையாக அணு விசை நுண்ணோக்கி முனைகள் பயன்படுகின்றன.

(A) (i) மற்றும் (ii) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (ii) மற்றும் (iii) மட்டும்
(D) (ii) மட்டும்

Which of the following statement(s) is/are true about the techniques used for nanomaterial synthesis?

(i) Ordered structural organisation of molecules occur when the system is in equilibrium without dissipating energy which is called static self assembly.

(ii) Electron beam Lithography uses beam of electromagnetic wave to generate patterns for integrated circuits at nanoscale.

(iii) Atomic force microscope tips can be used as a nanoscale write head to deposit chemicals on a surface.

